# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்


நலிந்தவனை நல் வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார்; காலைதோறும் அவர் என்னைத் தட்டி எழுப்புகின்றார்; கற்போர் கேட்பதுபோல் நானும் செவிகொடுக்கச் செய்கின்றார்.ஆண்டவராகிய என் தலைவர் என் செவியைத் திறந்துள்ளார். நான் கிளர்ந்தெழவில்லை. விலகிச் செல்லவுமில்லை. அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை. (எசாயா 50:4-6)

# உடன்பிறந்த உணர்வுடன் வரவேற்ற மால்ட்டா மக்களுக்கு நன்றி நவில்ந்தார் திருத்தந்தை!

**வத்திக்கான்:** அன்புச் சகோதர-சகோதரிகளே, உங்கள் அனைருக்கும் வணக்கம். கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு நாள்களில், திருத்தூதுப் பயணமாக மால்ட்டாவுக்குச் சென்றேன். இப்பயணம், சில காலத்திற்கு முன்னர் திட்டமிடப்பட்டது. மால்ட்டா, மத்தியதரைக் கடலின் மத்தியில் அமைந்திருக்கும் ஒரு தீவாக இருந்தபோதிலும், பலர் இந்நாடு பற்றி அறிந்திருக்கவில்லை. இத்தீவு மக்கள், மிகப் பழங்காலத்திலேயே நற்செய்தியைப் பெற்றனர். ஏனெனில், திருத்தூதர் பவுல், இத்தீவின் கடற்கரைகளுக்கு அருகில் கப்பல் சேதத்தில் சிக்கியபோது, அவரும், அவரோடு கப்பலில் பயணம் மேற்கொண்ட 270க்கும் மேற்பட்ட மக்களும் அற்புதமாய் காப்பாற்றப்பட்டனர்.



23ம் யோவான் புலம்பெயர்ந்தோர் மையத்தில் திருத்தந்தை

மால்ட்டா மக்கள், இவர்கள் அனைவரையும் “மிகுந்த மனிதநேயத்துடன்” (28:2) வரவேற்றனர் என்று திருத்தூதர் பணிகள் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. “மிகுந்த மனிதநேயத்துடன்” என்பதையே, எனது திருத்தூதுப் பயணத்தின் தலைப்பாகவும் தெரிவுசெய்தேன். புலம்பெயர்ந்தோர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய பாதையை மட்டுமல்ல, இந்த உலகம், உடன்பிறந்த உணர்வை மிகத்தாராளமாக வெளிப்படுத்தி, அவ்வுணர்வு கொண்டதாக அது அதிகமதிகமாக மாறவேண்டும் என்பதற்காகவும், அனைவரையும் அச்சுறுத்துகின்ற ஒரு “கப்பல் சேதத்திலிருந்து” நாம் காப்பாற்றப் படும்படியாகவும் இத் தலைப்பைத் தேர்ந்துகொண்டேன். இந்நேரத்தில், மால்ட்டாவில், மிகுந்த தாராளமனதோடு எனக்கு இனிய வரவேற்பளித்த அரசுத்தலைவர், அரசு அதிகாரிகள், ஆயர்கள், கத்தோலிக்கர், மற்றும் ஏராளமான தன்னார்வலர்களுக்கு மீண்டும் நன்றி சொல்கிறேன் என்றார்.

இவ்வாறு, கடந்த புதன் மறைக்கல்வியுரையை மால்ட்டா திருத்தூதுப் பயணத்திற்கு அர்ப்பணித்து அந்நாட்டிற்காக இறைவனை வேண்டினார் திருத்தந்தை பிரான்சிஸ். பின்னர், உக்ரைன் நாட்டின் புச்சா நகரிலிருந்து வந்த உக்ரைன் தேசியக் கொடியைத் தூக்கிக் காண்பித்தபடி பேசிய திருத்தந்தை, அந்நகரில் இடம்பெற்றுள்ள படுகொலைகள் குறித்த ஆழ்ந்த வேதனையை வெளியிட்டு, அந்நாட்டில் போர் முடிவுக்கு வரவேண்டும். மற்றும், அப்பாவி மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படுமாறு அழைப்புவிடுத்தார். மேலும், உக்ரைன் புலம்பெயர்ந்தோரை தாராளமனதோடு வரவேற்று, மிகச்சிறந்த முறையில் உதவுகின்ற போலந்து நாட்டு மக்களுக்கு திருத்தந்தை நன்றி கூறினார். அதற்குப் பின்னர், நம் தவக்காலப் பயணம், தூய ஆவியாரின் அருளால் தூய்மைப்படுத்தப்பட்ட, மற்றும் புதுப்பிக்கப்பட்ட இதயங்களோடு உயிர்ப்பைக் கொண்டாடுவதற்கு நம்மை அழைத்துச் செல்வதாக. என்றுரைத்து, எல்லாருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசிரையும் அளித் தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*மேரி தெரேசா: வத்திக்கான்*

# மனிதாபிமான நல்லெண்ணத்தில் போர் நிறுத்தம் தேவை

**வத்திக்கான்:** உக்ரைனில் இடம்பெற்றுவரும் போர் உடனடியாக நிறுத்தப்படுவதன் வழியாக, அப்பாவி குடிமக்கள், அத்தியாவசியமான மனிதாபிமான உதவிகளைப் பெற இயலும் என்று, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் தலைமைப் பொதுச் செயலர் அந்தோனியோ கூட்டேரஸ் அவர்கள் மார்ச் 28, கடந்த திங்களன்று கூறியுள்ளார்.

மனிதாபிமான போர் நிறுத்தம் உடனடியாக இடம்பெறுவதன் மூலம், ஐ.நா.வின் கோட்பாடுகளின் அடிப்படையில், அமைதி உடன்பாட்டை உருவாக்கும் அரசியல் ரீதியான



உண்மையான பேச்சுவார்த்தைகளை முன்னோக்கி நடத்திச்செல்ல முடியும் என்றும் கூட்டேரஸ் அவர்கள் கூறியுள்ளார்.

நியுயார்க்கில் செய்தியாளர்களிடம் பேசிய கூட்டேரஸ் அவர்கள், போர் நிறுத்தம் ஏற்படுவது, இப்போர் உலக அளவில் ஏற்படுத்தியுள்ள எதிர்விளைவுகளைக் களைய உதவும் என்றும், ஏற்கனவே பெருந்தொற்றின் எதிர்ப்பாதிப்புக்களிலிருந்து மீண்டுவர இயலாமல் துன்புறும் ஏழை நாடுகள், இப்போரால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் கூறியுள்ளார். இப்போரில் ரஷ்யா பயன்படுத்தக்கூடும் என்று அஞ்சப்படும் அணு ஆயுதங்களும், வேதிய ஆயுதங்களும் தவிர்க்கப்படவேண்டும் என்றும், அறிவற்றதனமாகத் தொடங்கப்பட்டுள்ள இப்போரில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர், ஒரு கோடிப் பேர் புலம்பெயர்ந்துள்ளனர் எனவும் கூட்டேரஸ் அவர்கள் தெரிவித்தார்.

# அருள்தந்தை விண்செனட் தோமஸ் பங்குத்தந்தைக்கான நியமனக் கடிதம் பெற்றார்

**ரவாங், சிலாங்கூர்:** கடந்த ஏப்ரல் 2, 2022 சனிக்கிழமை, ரவாங்கில் உள்ள புனித யூதா ததேயு பங்கு வரலாற்றில் மற்றொரு சிறப்பு நாளாக அமைந்தது. அன்று அப்பங்கின் புதிய பங்குத்தந்தையாக அருள்தந்தை விண்செனட் தோமஸ் அவர்கள் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களால் அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டார்.

ஏறக்குறைய 600 பங்கு மக்கள் பங்கேற்ற மாலைத் திருப்பலியில் பேராயரிடமிருந்து அருள்தந்தை விண்செனட் தோமஸ் அவர்கள் நியமனக்கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். இதுவே பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்கும் இவரது முதல் பங்கு என்பது குறிப்பிடத்தக்கது.

பேராயர் ஜூலியன் லியாவ் அவரது தொடக்க உரையில், “அருள்தந்தை விண்செனட் அவர்கள் இந்த பங்கின் இறைமக்களுக்கு ஆர்வத்துடனும், நம்பிக்கையுடனும், உண்மையுடனும் நேர்மையுடனும் ்பணி செய்வார் என்று கூறி பங்கின் திறவுக்கோளை அருள்தந்தை விண்செனட் அவர்களிடம் ஒப்படைத்தார். இது பங்குத் தந்தையாக அவருக்கு வழங்கப்படும் ஆளுமை அதிகாரத்தைக் குறிக்கிறது.



தொடர்ந்து, பங்கு மேய்ப்புப்பணி மன்றத்தின் தலைவர் கிறிஸ்தின் விண்செனட் அவர்கள் பேராயர் வழங்கிய பங்குத் தந்தைக்கான நியமனக் கடிதத்தை மக்கள் முன் வாசித்தார். அடுத்து புதிய பங்குத்தந்தை அருள்பணி விண்செனட் அவரது குருத்துவ அருள்பொழிவின் போது அளித்த வாக்குறுதிகளை வாசித்து நினைவுக்கூர்ந்தார். தொடர்ந்து நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுக்குப் பிறகு, அருள்தந்தை விண்செனட் அவர்கள் இறைமக்கள் முன்னிலையில் தமது நம்பிக்கை வாக்குறுதியை அளித்து நியமன ஆவணத்தைப் பெற்றுக்கொண்டார்.

நிறைவாக, திருப்பலிக்குப் பிறகு, சிறப்பு அணிச்சல் ஒன்றை அருள்தந்தை அவர்கள் வெட்டினார். பின்னர் பங்கு மக்கள் சார்பாக ஒரு அன்பளிப்பும் வழங்கப்பட்டதோடு, மேற்கண்ட நிகழ்வு ஒரு முடிவை எய்தியது. புனித யூதா ததேயு பங்கைத் தாய்ப்பங்காகக் கொண்ட பத்து ஆராங் புனித மிக்கேல் சிற்றாலயமும் இவரது பார்வைக்கு உட்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



‘மக்கள் சேவையே மகேசன் சேவை’ என்ற கொள்கைக் கொண்ட அருள்தந்தை விண்செனட் அவர்கள் இதற்கு முன்பாக ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் காஜாங், திருக்குடும்பப் பங்கில் துணை பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றிருந்தர்.

# இயேசுவைப் பற்றி சிந்திப்பதற்கும் அவரை பின்பற்றுவதற்குமான காலம்!-தவக்காலச் சிந்தனை!

**கோலாலம்பூர்:** ஸ்தாபாக் நல்லாயன் பங்கின் அடிப்படை திருஅவை சமுகங்களின் ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில், இயங்கலை வழியாக கடந்த மார்ச் 16, 23 மற்றும் 30 ஆகிய நாள்களில் 'இயேசுவை அனுபவித்தல்' எனும் கருப்பொருளில் உருவாக்கப் பயிற்சி யொன்று நடைபெற்றது.

கடந்த இரண்டு வருட காலமாக, தொற்றுநோயின் போது எந்தவொரு உருவாக்கப் பயிற்சியும் இல்லாமல் விடுபட்டதைக் கருத்தில் கொண்டு, பங்கின் அடிப்படை திருஅவை சமுகங்களின் ஒருங்கிணைப்பு குழு மேற்கண்ட உருவாக்கப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தது. இப்பயிற்சியின் வழி பங்கேற்பாளர்கள் இந்த தவக்காலப் பயணத்தில் இயேசுவின் உடனிருப்பை ஆன்மீக ரீதியல் உணர உதவியது.




நடைபெற்ற மூன்று அமர்வுகளிலும் பாடற்குழுவினரால் புகழ்ச்சி ஆராதனை, பங்குத்தந்தை மிச்சேல் ஜோசப் அவர்களின் தியானம் ஆகியவற்றோடு இரக்கத்தின் ஆண்டவர் மன்றாட்டும் இடம்பெற்றது. முதல் நாள், மிச்சேல் ஜோசப் அவர்கள் 'இயேசுவும் சோதனையும்' என்ற துணைத் தலைப்பை யொட்டி விளக்கமளித்தார். 'மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்? மனிதப் பிறவிகளை நீர் ஒருபொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம்மாத்திரம்? (திபா **8:4**) எனும் பகுதியைக் கொண்டு கடவுள் மனிதர்களைப் படைத்தார், மேலும் அவர் நம் ஒவ்வொருவரிடமும் ஒரு நெருக்கமான ஆர்வத்தையும், யாரும் அழியக்கூடாது என்ற விருப்பத்தையும் கொண்டிருக்கிறார் என்று விவரித்தார்.




இரண்டவது அமர்வில், 'மறைத்தூதுரைப் பணிக்கு அழைக்கப்பட்டுள்ளோம்' எனும் தலைப்பில் நமது சோதனைகள் எதுவாக இருந்தாலும் மறைத்தூதுரைப் பணியை கைவிட இயலாது என்பதை வலியுறுத்தினார். மேலும் நாம் திருஅவையில் ஒரு உறுப்பினர் மட்டும்தானா அல்லது அதில் செயல்படுபவர்களா? எனும் கேள்வியை முன்வைத்தார்.

மூன்றாவது அமர்வில் நமது இலக்கானது சிலுவை சுமந்து முன் செல்வதாகும். எளிய முறையில் சுலபமாக செயலாற்றுதல்ல என்பதை மேலும் உணர்த்தினார். இந்த மூன்று நாள் தியானத்தில் பங்கேற்றோர் இறுதியில் நல்ல சாட்சியங்களைப் பகிர்ந்து விடைபெற்றனர்.

## பனித பவுல் அடிகளின் மறைத்தூதுப் பணிகள்

காஜாங்: கடந்த ஏப்ரல் மாதம் 5-ம் திகதி, செவ்வாய் அன்று, இரவ 8.00 மணிக்கு 'பவுல் அடிகளின் மறைத்தூதுப் பணிகள்' என்ற தலைப்பில், பங்கு திருவிவிலியப் பணிக்குழுவின் ஏற்பாட்டில் சொற்பொழிவு ஒன்று நடைபெற்றது.

இயங்கலை வழியாக நடைபெற்ற இச்சொற்பொழிவை பங்கின் சகோ. அந்தோணி இன்னாசி அவர்கள் படைத்தார். பவுல் அடிகளின் மூன்று மறைத்தூதுப் பயணங்களையும் தெளிவுற விளக்கி, இப்பணியில் அவர் மேற்கொண்ட ஒவ்வொரு ஊர்களையும் வரைபடங்கள் உதவிக் கொண்டு விளக்கியது, புரிந்துகொள்ள சிறப்பாக அமைந்தது.

இறுதியில் விவிலியக்குழுவின் பொறுப்பளார் சகோ. மதலின் அவர்கள் இறுதி இறைவேண்டலையும் நன்றியையும் கூறி நிகழ்வை நிறைவுச் செய்தார்.




*சொற்பொழிவாளர் அந்தோணி இன்னாசி*

# ஆயர் மாமன்றத்திற்கான மலாக்கா ஜொகூர் மறைமாவட்ட தென் வட்டாரத்தின் முன் பேரவை

**ஜொகூர் பாரு:** கடந்த 2 ஏப்ரல், 2022 அன்று காலை 9.00 மணிக்கு இங்குள்ள புனித அமலோற்பவ அன்னை பங்கில் ஈராண்டு களுக்குப் பிறகு ஆயர் மாமன்றத்திற்கான மலாக்கா ஜொகூர் தெற்கு மறைவட்டத்தின் முன் பேரவை நடை பெற்றது. இப்பேரவையில் ஆயர், அருள் பணியாளர்கள், அருள்கோதர-சகோதரி கள், பொதுநிலையினர் என 156 பேர் கலந்துகொண்டனர்.

அன்று, மறைமாவட்டதின் ஆயர் பெர்னர்ட் பவுல் அவர்கள் அவரது தொடக்கவுரையில், 'நம்பிக்கையாளர்கள் கூடிவரும்போது ஒரு சமூகம் உருவாகிறது, பல சமூகங்கள் கூடும்போது ஒரு பங்கு உருவாகிறது. அடுத்து பல பங்குகளின ஒன்றிப்பு ஒரு மறை மாவட்டமாக உருவகம் காண்கிறது என்றார். தொடர்ந்து, 'நாம் பலராக இருந்தாலும் கிறிஸ்துவின் உடலை உருவாக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்' என்பதைத் தெளிவுப்படுத்தினார்.




*பேரவையில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.*

மார்ச் மாதம் முழுவதும் மறைமாவட்ட பங்குகள் அளவில் பெறப்பட்ட கருத்துக் கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு, மறை வட்டத்திற்கு அனுப்பட்டது. பிறகு, மறை வட்ட அளவில் மேற்கண்ட தொகுப்புகள் மறைமாவட்டத்திற்குக் கொண்டு செல்லப் பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அடுத்து, மத்திய வட ஜோகூரில் கடந்த மார்ச் 30-ம் திகதி, இணையம் வழி 56 பேர்கள் கலந்துக் கொண்ட இதுபோன்ற பேரவை நடைபெற்றது. இதனையடுத்து, மலாக்கா மறைமாவட்டத்தில் எதிர்வரும் ஏப்ரல் 27-ம் திகதி இப்பேரவை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

மேற்கண்ட பேரவை, நற்கருணை ஆராதனையோடு பேரவைத் தொடங் கியது. அதை தொடர்ந்து ஆயரின் உரை இடம்பெற்றது, பின்னர் பெறப்பட்ட கருத்துக்களைத் ஆய்ந்த, பங்கெடுப்பாளர் கள் பகிர்ந்துக் கொண்டனர்.

பின்னர், மறைமாவட்ட மாமன்றக் குழுவிற்கு பொறுப்பேற்றிருக்கும் அருள்தந்தை மோசஸ் இராயப்பன் அவர்கள் பங்கெடுத்த அனைவரது ஒத்துழைப்புக்கும், நன்றியும், பாராட்டும் தெரிவித்துக் கொண்டார். மேலும், தூய ஆவியான வரின் குரலுக்குச் செவிகொடுக்கும் மக்களாகவும் ஒற்றுமை யுடனும் துடிப்பு டனும் ஆரம்பகால திருஅவை சமூகம்போல், ஒரே உள்ளமும் ஒரே உயிரும் (அப்.பணி 4:32) கொண்டவர்களாய் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஆயர் தமது இறுதியுரையில், மாறுபட்ட திருஅவையாக இருப்பதற்கு ஒற்றுமையும் தூய ஆவியானவரின் வழிநடத்தலும் தேவை. முழுமைப்பெற்ற திருஅவை, பங்கு அல்லது மறைமாவட்டம் என்று எதுவும் இல்லை. வலிமைகள் மட்டும் அல்ல, பலவீனத்தையும் பாவநிலையும் கண்டு, நம்பிக்கையுடன் இறையரசை கட்டியெழுப்ப திருஅவை அழைக்கப் பட்டிருக்கிறது. 'இது எனது மறை மாவட்டம். எனவே, நான் பணியாற் றுகின்றேன். நமது பலவீனத்தின் இடையே ஒவ்வொருவரையும் சென்றடைய, நாம் முக்கியமானவர்கள் மற்றும் கிறிஸ்துவின் உடலில் நாம் பங்கெடுப்பதால் சிறப்பானவர்கள்' என்று பேராளர்கள் மத்தியில் ஆயர் வலியுறுத்தினார்.

இம்மாமன்றப் பயணம் மே 3-ம் திகதி 2022-ல் ஜோகூர்பாரு, அமலோற்பவ மாதா தேவாயத்தில் நடைபெறும் மறை மாவட்ட மாமன்றப் பேரவையில் நிறைவு பெறும்.

*-மலாக்கா ஜோகூர் மறை மாவட்ட மாமன்றக்குழு.*

**மனமென்னும் நிலமானது, உண்ணா நோன்பால் தயாரிக்கப்படுகிறது, இறைவேண்டலால் நீருற்றப்பெறுகிறது மற்றும், பிறரன்பால் வளப்படுத்தப்படுகிறது" - திருத்தந்தை பிரான்சிஸ்**
(05/04/2022 )

# அன்பின் வழியது குருத்து ஞாயிறு!

திகிலும் திருப்பங்களும் நிறைந்த புனித வாரத்தில் நாம் காலெடுத்து வைக்கிறோம். இயேசுவோடு பயணித்து, அவர் கடந்து சென்ற. கைது, விசாரணை, பாடுகள், இறப்பு நிகழ்வுகளை நாமும் தியானித்து அறிந்துணர அழைக்கப்படுகிறோம். குருத்து ஞாயிறு அல்லது பாடுகள் ஞாயிறு என அழைக்கப்படும் இந்நாளில் வெற்றித் திருமகனாக இயேசு, எருசலேமிற்கு வரவேற்கப்படுகிறார். "ஓசன்னா" அல்லது "வாழி" என வாழ்த்தி அவரை மக்கள் வரவேற்கின்றனர்.

ஆனால் வெற்றித் திருமகன் குதிரையில் அமர்ந்து வராமல், கழுதையில் வருவது மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக் கலாம். குதிரை மேல் அமர்ந்து வருவது, அதிகாரத்தையும் ஆற்றலையும் வெற்றியை யும் குறிக்கும். ஆனால் இயேசுவோ கழுதையில் வந்தது, அவர்களுக்கு அதிருப் தியைக் கொடுத்திருக்கலாம். கழுதை `அமைதியின்' சின்னம் என்பது அவர்களுக் குத் தெரியாமல் போய்விட்டது.
இவ்வாறு இயேசு தான் இந்த உலகத்திற்கு அமைதியைக் கொண்டு வந்த அமைதியின் அரசர் என்பதை நிரூபிக்கின்றார். ஏற்கனவே அவருடைய பிறப்பின்போது வானத்தூதர் கள், "உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக் 2:14) என்று பாடியதையும் இங்கு இணைத்துச் சிந்தித்துப் பார்ப்பது பொருத்தமாயிருக்கும்.

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் துன்புறும் ஊழியனைக் குறித்துப் பேசுவார். அந்த துன்புறும் ஊழியன் `இயேசுவே' என்பது விவிலிய அறிஞர்கள் கூறக்கூடிய செய்தி. "மெசியாவாகிய அவர் அடிப்போருக்கு முதுகையும், தாடையைப் பிடுங்குவோருக்கு தாடையையும் கொடுத்தார்; நிந்தனை செய்வோருக்கும், காரி உமிழ்வோருக்கும் அவர் தனது முகத்தை மறைக்கவில்லை". இரண்டாம் வாசகத்தில் பவுலடியார் கூறுவார், "கடவுள் வடியில் இருந்த அவர் (இயேசு) தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் கோலம் பூண்டு, சிலுவைச் சாவை ஏற்றுக்கொள்கிறார்" என்கிறார்.

இப்படியாக இயேசு காயங்கள், துன்பங்கள் எல்லாவற்றையும் துணிவோடு ஏற்றுக்கொள் கிறார்.

வாக்களிக்கப்பட்ட மெசியாவாகவும் அமை தியின் அரசராகவும் விளங்கிய இயேசு நம்மை மீட்பதற்காகத் தன்னுடைய உயிரையே தருகிறார் எனில், அதற்கு கைமாறாக நாம் ஏதாவது செய்வது நம்முடைய கடமையாகும். இயேசு எருசலேமிற்குள் நுழையும் முன்பு கண்ணீர் வடித்தார் (லூக் 19: 41-42), நுழைந்த பின்பு திருக்கோவிலில் வாணிபம் நடப்பதைக் கண்டும் அத்திமரத்தில் கனி இல்லாததையும் கண்டும் வேதனையடைந்தார் (லூக் 19: 44-46). நாம் எருசலேம் நகர் வாழ் மக்களைப் போன்று இயேசுவுக்கு வருத்தத்தையும் வேதனையும் தரப்போகின்றோமா? அல்லது அவரது கட்டளையைக் கடைப்பிடித்து, மிகுந்த கனிதந்து (யோவா 15:8) அவரது அன்பில் நிலைத்திருக்கப் போகிறோமா? (யோவா 15:9) என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

குருத்து ஞாயிறின் போது ஆசீர்வதிக் கப்பட்ட குருத்தோலைகளை வீட்டிற்குக் கொண்டு வந்து, வீட்டுப் பீடத்திலும் வாசற்கதவுகளிலும் வைத்துவிடுவோம். அவை சிறிது காலத்தில் உலர்ந்து காய்ந்து விடும். இது போன்றதில்லை நம் கிறிஸ்தவ வாழ்க்கை. எனவே அவரது சீடர்களாக இருக்கக்கூடிய நாம், இயேசுவைப் போன்று துன்பங்களைத் துணிவுடன் ஏற்றுக்கொண்டு பிறர் வாழ நம்மையே தரும் மக்களாக வேண்டும்.

*-அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பனான் செர்டா*

**குருத்து ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | எசா 50: 4-7 |
| தி. பாடல்: | 22:7-8.16-17.18-19.22-23 |
| 2ம் வாசகம்: | பிலி 2: 6-11 |
| நற்செய்தி: | லூர்க்கா 22: 14- 23: 56 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2திருப்புகழ் மாலை—குருத்து ஞாயிறு**